# உளூவின் அடிப்படைகள்

*அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ إِذَا قُمْتُمْ إِلَى ٱلصَّلَوٰةِ فَٱغْسِلُوا۟ وُجُوهَكُمْ وَأَيْدِيَكُمْ إِلَى ٱلْمَرَافِقِ

وَٱمْسَحُوا۟ بِرُءُوسِكُمْ وَأَرْجُلَكُمْ إِلَى ٱلْكَعْبَيْنِ ﴿٦﴾ المائدة ( ٦ )

*பொருள்: இறைநம்பிக்கை கொண்டவர்களே, தொழுகைக்காகச் செல்லும்போது உங்கள் முகங்களையும், முழங்கைகள்வரை உங்கள் கரங்களையும் கழுவிக்கொள்ளுங்கள், இன்னும், உங்களுடைய தலைகளை (நீரால்) தடவிக்கொள்ளுங்கள், மேலும், உங்கள் கால்களை கணுக்கால்கள்வரை கழுவிக்கொள்ளுங்கள். (அல் மாயிதா:6)*

## உளூவின் அடிப்படை அம்சங்கள்

1 **நிய்யத் செய்தல்**

2 **முகத்தைக் கழுவுதல்** முகம் என்பது நெற்றியின் மேலுள்ள முடியின் வேர்கள் முதற்கொண்டு முகவாய்க்கட்டடைக்குக்கீழ் வரையிலும், இரண்டு காதுகளின் மடல்கள் வரையிலுமான பகுதியாகும். சில அறிஞர்கள் மூக்கில் நீரிட்டுக் கழுவுதல் மற்றும் வாய்க்கொப்பளித்தலையும் இவ்விரண்டும் முகத்தின் பகுதிகள் என்ற வகையில் வாஜிபானதாகக் கருதுகின்றனர்

3 **இரண்டு கைகளையும் முழங்கை முட்டுக்களுடன் சேர்த்துக் கழுவுதல்**

4 **தலை முழுவதும் அல்லது அதன் பெருமளவிலான பகுதியை மசஹ் செய்தல் (நீரால் தடவுதல்).** சில அறிஞர்கள் காதுகளையும் இத்தடன் சேர்த்துக் கொள்கின்றனர்.

5 **கணுக்காலும் சேர்த்து இரண்டு கால்களையும் கழுவுதல்**

6 **இவற்றை வரிசை முறையில் திருக்ஃகுர்ஆனில் கூறப்பட்டுள்ளதுபோன்று கழுவுதல்** *(சில அறிஞர்களின் கருத்து)*

7 **மேற்கூறப்பட்ட உறுப்புக்கள் அனைத்தையும் தொடர்ந்து அதிக இடைவெளியில்லாமல் கழுவி ஒரே நேரத்தில் உளூ செய்துமுடிக்கவேண்டும்,** தவணைகளாக விட்டு விட்டு செய்யக்கூடாது.

## உளூவின் சுன்னத்துகள்

ஒரு முஸ்லிம் எந்த ஒன்றைச் செய்தாலும் இயல்பாகவே இறைத்தூதர் ﷺ அவர்கள் செய்துகாட்டிய அல்லது கட்டளையிட்டுள்ள முறையிலேயே

www.uzaifafani.com

*செய்ய வேண்டும் என்று விரும்பும் பண்பினையுடையவராக இருப்பார். இதுவே, அவர் இறைத்தூதர் ﷺ மீது கொண்டிருக்கும் அன்பு மற்றும் பாசத்தின் தவிர்க்கமுடியாத ஈர்ப்பும் ஒருவருடைய ஈமானின் இன்றியமையாத பண்புமாகும். திருக்ஃகுர்ஆனில் இதனையே அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِي يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ﴿٣١﴾ ( آل عمران 31 )

*பொருள்: (நபியே, மக்களிடம்) நீர் கூறுவீராக, நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள், அல்லாஹ் உங்களை நேசிப்பான், மேலும், உங்களுடைய பாவங்களையும் மன்னிப்பான் (ஆலு இம்ரான்:31).*

**உதூவின் மேற்கூறப்பட்ட சுன்னத்துகள் கீழ்வருமாறு:**

1 **உதூ செய்யத் துவங்கும் முன் بِسْمِ اللهِ பிஸ்மில்லாஹ் சொல்லுதல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: لَا وُضُوءَ لِمَنْ لَمْ يَذْكُرِ اسْمَ اللَّهِ عَلَيْهِ எவர் பிஸ்மில்லாஹ் கூறவில்லையோ அவருடைய உதூ ஏதுமில்லை (அபூதாவூத், இப்னு மாஜா, ஹாகிம்)

2 **இரு கைகளையும் முழங்கை முட்டு வரையிலும் கழுவுதல்**

3 **வாய்க் கொப்பளித்தல்**

4 **மூக்கில் நீரிட்டு சுத்தப்படுத்துதல்** *இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

أَسْبِغِ الْوُضُوءَ، وَخَلِّلْ بَيْنَ الْأَصَابِعِ، وَبَالِغْ فِي الِاسْتِنْشَاقِ إِلَّا أَنْ تَكُونَ صَائِمًا ( أصحاب السنن )

*பொருள்: நல்ல முறையில் உதூ செய்யுங்கள், விரல்களுக்கிடையே (விரல்களால்) சுத்தம் செய்யுங்கள், மூக்கில் நன்றாக நீரைச் செலுத்துங்கள் (நீங்கள் நோன்பு நோறப்பவராக இல்லாதிருந்தால்)*

5 **மிஸ்வாக் செய்தல்** *இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

لَو لاَ أَن أشقَّ على أُمَّتي لأَمَرتُهُم بالسِّوَاكِ معَ كلِّ صلاَة

*பொருள்: என்னுடைய உம்மத்தினர்மீது கஷ்டமானதாக ஆகிவிடும் என்ற அச்சம் எனக்கு இல்லாதிருக்குமேயானால் நான் அவர்களை ஒவ்வாரு தொழுகையுடனும் மிஸ்வாக் செய்துகொள்ளும்படி கட்டளையிட்டிருப்பேன் (பெரும்பாலான முஹத்தித்ஸீன்கள்)*

www.uzairfalahi.com

6 **தாடி மற்றும் விரல்களுக்கிடையே சுத்தம் செய்தல்** إِذَا تَوَضَّأْتَ فَخَلِّلِ الْأَصَابِعَ *(திர்மிதி, இப்னு மாஜா)*

7 **அனைத்து உறுப்புக்களையும் மூன்று தடவை கழுவுதல்** *(இருப்பினும் மசஹ் ஒரு தடவை செய்தால் போதுமானது)*

8 **இரு காதுகளிலும் புதிதாகத் தண்ணீரைக்கொண்டு உட்புறமாகவும் வெளிப்புற மாகவும் மசஹ் செய்தல்**

9 **கை கால்களைக் கழுவுவதில் முதலில் வலது புறமாகத்துவங்குதல்.** *ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒவ்வொன்றிலும் வலது புறமாகவே துவங்குவதை விரும்புவார்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).*

**உதூவில் விரும்பத்தக்கவை**

1 **ஃகிப்லாவின் புறமாக முகத்தைத் திருப்பி உட்காருதல்**

2 **சுத்தமான இடத்தில் உட்கார்ந்து உதூ செய்தல்**

3 **நிய்யத் செய்தல்**

4 **உதூ செய்யும்பொது வீண்பேச்சைத் தவிர்த்தல்**

5 **கைவிரலில் மோதிரம் இருந்தால் அதனைச் சுழற்றிவிடுதல்**

6 **வலது கையினால் மூக்கில் நீரிட்டு இடது கையினால் சுத்தம் செய்தல்**

7 **உறுப்புக்களைக் கழுவும்போது சருமம் வரை தண்ணீர் சென்றடைந்ததா இல்லையா என்ற சந்தேகம் வராதிருக்கும் வகையில் தேய்த்துக்கொள்ளுதல்**

8 **உறுப்புக்களைக் கழுவும்போது மறுமை நாளன்று வெகுதூரம் வரையிலும் அவை பிரகாசித்துக்கொண்டிருக்கும் வகையில் அதிகமாகவே கழுவுதல்**

9 **உதூ செய்து முடித்தபின் இரண்டு ரகஅத்துக்கள் தஹிய்யதுல் உதூ தொழுகை நிறைவேற்றுதல்** *இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

مَا مِنْ مُسْلِمٍ يَتَوَضَّأُ فَيُحْسِنُ وُضُوءَهُ، ثُمَّ يَقُومُ فَيُصَلِّي رَكْعَتَيْنِ، مُقْبِلٌ عَلَيْهِمَا بِقَلْبِهِ وَوَجْهِهِ، إِلَّا وَجَبَتْ لَهُ الْجَنَّةُ مسلم )

*பொருள்: எந்த ஒரு முஸ்லிமும் நல்ல விதமாக உதூ செய்து, முழு மனதுடனும் கவனத்துடனும் இரண்டு ரகஅத்து தொழுகையை நிறை வேற்றினால். அவருக்கு சுவர்க்கம் வாஜிபானதாக ஆகிவிடுகிறது (முஸ்லிம்).*

www.uzairfalahi.com

## உதூவை முறிப்பவைகள்

1 மல ஜலம் கழித்தல், அதன் வழியாக காற்று மற்றும் வதி, மத்ஜி அல்லது இந்திரியம் ஆகியன வெளியாதல்

2 ஒன்றில் சாய்ந்து தூங்கிவிடுதல்

3 மனிதன் சுய உணர்வையே இழந்துவிடுதல், உதாரணமாக, பைத்தியம் பிடித்தல், காக்காய் வலிப்பு அல்லது மயக்கம் ஏற்படுதல்.

4 நேரடியாக மர்மஸ்தானத்தைத் தொடுதல்

5 காம உணர்வுடன் பெண்ணைத் தொடுதல், களியாட்டங்களில் ஈடுபடுதல்

6 உடலின் எப்பகுதியிலிருந்தும் அசுத்தமான ஒன்று வெளிப்படுதல் உதாரணமாக, வாந்தி, இரத்தம், மற்றக் கசிவுகள் வடிந்து விழும் அளவிற்கு வெளியாதல்

* * *

www.uzairfalahi.com